# ஒரு அறிமுகம்

*தேவனுடைய இயல்பைப் பற்றி கலந்துரையாடுவதில் எச்சரிக்கை தேவைப்படுகின்றது. இயல்பான எல்லாவற்றிற்கும் மேலானவரான ஒருவருக்கு "இயல்பு" என்ற வார்த்தை பயன்படுத்தப் படுவதே ஏற்றுக் கொள்ளத் தகாததாக இருக்கலாம். தேவனின் புலன் கடந்த நிலையானது[1] ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், விசேஷமாக வேத வசனங்களில் விளக்கியுரைக்கப்படுகின்றது (உதாரணம். யோசுவா 2:11). ஆகையால், தேவன் "இயல்பானவர்" அல்லவே அல்ல என்று கூறப்பட முடியும்; அவர் இயல்புக்கு மேலானவராக இருக்கின்றார். அவர் மேலான இயல்புடைய வராயிருக்கின்றார்.*

*இரண்டாவதாக, புலன் கடந்த நிலையில் (உலகிற்கு மேலானவராக) இருக்கும் ஒரு தேவன் உலகம் முழுவதிலும் பரவியும் (உலகத்திலும்) இருக்கின்றார் என்பது எப்படி என்று விளக்குவதற்கு முயற்சி செய்வதில் எச்சரிக்கை தேவைப்படுகின்றது. "இங்கும்" மற்றும் "அங்கும்" ஒருவர் இருக்கின்றார் என்ற நினைவு கூட/சிந்தனையே கூட நிலைநிறுத்தக் கடினமானதாக உள்ளது, இருந்தாலும் இந்த சத்தியமானது அப். 17:27ல் விளக்கப்படுகின்றது. ஒருவேளை இப்படிப்பட்டது போன்ற ஒரு சிந்தனையை J. B. பிலிப்ஸ் அவர்களைப் பல வருடங்களுக்கு முன்பு உங்கள் தேவன் மிகவும் சிறியவர்[2] என்ற உட்கண்ணோட்டம் நிறைந்த ஒரு புத்தகத்தை எழுதத் தூண்டியிருக்கலாம். உதவியில்லாமல் தேவனைப் புரிந்து கொள்ளப் போதுமான அளவு பெரிதாகச் சிந்திப்பது என்பது நம்மைப் பொறுத்த வரையில் சாத்தியமற்றதாக இருக்கின்றது. தேவனு டைய இயல்பைப் பற்றி வினயமாக ஆழ்ந்து சிந்திக்க மனித குலத்திற்குத் தாழ்மை தேவையாய் உள்ளது. நமது உயர்ந்த உணர்வுகளும் கூட அவரது மகிமையின் நிறைவில் தேவனுடைய உயர்வின் தன்மையை மிகவும் அரிதாகவே பகுத்துணர முடியும் (1 தீமோ. 6:16; 1 யோவா. 4:12).*

*மூன்றாவதாக, தேவனைப் புரிந்து கொள்ள முயற்சி செய்வது என்பது நமது வாழ்க்கையின் மாபெரும் அறை கூவலாக உள்ளது. தேவனைப் பற்றிச் சிந்திக்கின்ற ஒவ்வொரு நபரும் அவரைப் பற்றி ஒரு வரையறைக்குட்பட்ட வழி முறையில்தான் சிந்திக்கின்றனர். நாம் தனிமையாக இடர்ப்பட்டுக் கொண்டிருந்தால், நம்மால் வெல்ல முடியாதவைகளினால் நாம் இடர்ப்பாடு அடைகின்றோம் என்று நாம் இயற்கையாகவே உணருகின்றோம். இது வேதாகமத்தின் உறுதிப்பாடு என்பதை வேதாகம வாசகர் ஒவ்வொருவரும் அறிகின்றார் (ஏசா. 55:8, 9ஐக் காணவும்).*

*பிறகு நாம் என்னதான் செய்ய வேண்டும்? நமது சொந்த வரையறைகள் மற்றும் போதுமற்ற தன்மைகள் ஆகியவற்றை நாம் அறிக்கை செய்கையில் நாம் தாழ்மையை அடைகின்றோம். நமது சொந்த ஆதார மூலங்கள் தவிர, மற்றவற்றையும், நாம் பயன்படுத்தி, வாதாடுவோம் வாருங்கள் என்ற*

*தேவனுடைய அழைப்பையும் ஆவலுடன் ஏற்றுக் கொள்ளுகின்றோம் (ஏசா. 1:18). இந்தத் தொடரின் முதல் பாகத்தில் அவர் நம்முடன் எவ்விதம் தொடர்பு கொள்கின்றார். நாம் அவருடன் எவ்விதம் தொடர்பு கொள்கிறோம் என்ற வகையில் நாம் தேவனுடைய இயல்பைப் பற்றிக் கற்போம். இது, நமது இணைவான முயற்சிகளுக்குத் தகுதியான மெய் சிலிர்க்கும் ஒரு சாதனையாக இருக்க வேண்டும்.*

---

*குறிப்புகள்*

[1]*தேவன் இயற்கையின் எல்லைப் பகுதிகளைக் "கடந்து செல்கின்றார்" அல்லது "அப்பால் செல்லுகின்றார்."* [2]J. B. Phillips, *Your God Is Too Small* (New York: Macmillan Co., 1961).